வினா எண் 488. திரு. கே. முனிவெங்கடப்பன், இருக்கையில் இல்லை. அவருக்குப்பதிலாக திரு. கா. பூ.முனுசாமி, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

488—

கிருட்டிணகிரியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கூடுதல் வீடுகள் கட்டுதல்

*20478— திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், கிருட்டிணகிரியில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் கட்டிய வீடுகள் போதுமான அளவு இல்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், மேலும் வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தர்மபுரி மாவட்டம், கிருட்டிணகிரியில் வீட்டுவசதி வாரியம் இதுவரை குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு 42 வீடுகளையும் நடுத்தர மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினருக்கு 272 வீடுகளையும் மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 336 வீடுகளையும் ஆக மொத்தம் 650 வீடுகளைக் கட்டியுள்ளது. கிருட்டிணகிரியில் மேலும் வீடுகள் கட்டுவதற்காக தற்போது நிலங்கள் எதுவும் வாரியத்தினுடைய கைவசம் இல்லை. எனவே விரிவாக்குவதற்கான எந்தத் திட்டமும் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தினுடைய மையப் பகுதியாக கிருஷ்ணகிரி இருக்கின்ற காரணத்தினாலும், பல்வேறு அரசுத் துறைகளிலே பணியாற்றுகின்ற அலுவலர்களும் மற்றும் பல வியாபாரப் பெருமக்களும் மையப் பகுதியாகிய கிருஷ்ணகிரி நகரத்திலே தங்கியிருக்கின்ற காரணத்தினாலும் இன்னும்அதிகப் படியாக 500 வீடுகள் கட்டினால்கூட அங்கே தங்குவதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே புதிதாக நிலத்தைக் கையகப் படுத்தி அடுத்த நிதியாண்டிலாவது வீட்டுவசதித் துறையின் மூலமாக 500 வீடுகள் கட்ட அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : தலைவர் அவர்களே, குடியிருப்புகளின் தேவைக்கேற்ப இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசுக்குச் சொந்தமான தக்க நிலம் தற்போது இல்லை. எனவே நிலம் கையகப்படுத்தப்பட்டபின் அல்லது நிலம் கிடைத்தபின் கிருட்டிணகிரி பகுதியிலே புதிதாகக் குடியிருப்பு கட்டுகின்ற திட்டம் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 489, திரு. பி.வி. இராஜேந்திரன், இருக்கையில் இல்லை. வினா எண் 490, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

490—

குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்க வேளாண்மைத் துறை மூலம் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தல்.

*23451—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடிநீர்த்தட்டுப்பாட்டைப் போக்குவதற்காக வேளாண்மைத் துறை மூலம் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குடிநீர்த் தட்டுப்பாட்டைப்போக்குவதற்காக, உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், ஊரகக் குடிநீர் வழங்கும் திட்டமொன்று உப திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது ஊரக வளர்ச்சி இயக்குநர் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 1993—94-ஆம் ஆண்டில் 3,682 ஆழ்குழாய்க் கிணறுகளுடன் கூடிய குடிநீர் கைக்குழாய்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டம் தமிழகத்தில் ஒன்பது மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது,

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர்த்தட்டுப்பாட்டைப்போக்குவதற்காக தமிழ்நாடு வேளாண்மைத் துறையின் மூலம் 9 மாவட்டங்களில் இந்தத் திட்டம் செயல்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். எந்த எந்த மாவட்டங்களில் இந்தத் திட்டம் அமல்படுத்தப்படுகிறது என்பதையும் இதற்காக எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.